## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கும்பல்கமுவ மினி ஹைாட்ரோ (பிறைவேட்) லிமிட்டட்டின் (“கம்பனி”) 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் தாக்கத்தைத் தவிர்த்து கம்பனியின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பான எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வு பரப்பெல்லை

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் கம்பனியின் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை

காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் முகாமைத்துவத்திற்கு அறிவிக்கப்பட்டது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- கம்பனி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- கம்பனியின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக் கூற்றுக்கள்

### 1.5.1 இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை.

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மினி நீர் மின் நிலையத்தை ரூபா 3,858,005 ஆன வருடாந்தக் கட்டணத்தில் நிர்மாணித்தல், சொந்தமாக வைத்தல் மற்றும் இயக்குதல் போன்ற நோக்கங்களுக்காக 2015 பெப்ரவரி | முகாமைத்துவத்தின் கருத்துரை வழங்கப்படவில்லை. | கணக்கீட்டு நியமத்தின் விதி முறைகளுக்கு இணங்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 15 முதல் 20 வருட காலத்திற்கு காணியைக் குத்தகைக்கு விடுவதற்காக வனப்பாதுகாப்புத் திணைக்களத்துடன் கம்பனி ஒப்பந்தமொன்றை ஏற்படுத்தியுள்ளது. இருப்பினும், குத்தகை மீதான இலங்கை நிதி அறிக்கையிடல் நியமத்தின் கீழ் (எஸ்எல்எவ்ஆர்எஸ்16) பயன்பாட்டு நிலத்தின் மதிப்பானது குத்தகைச் சொத்து மற்றும் குத்தகைப் பொறுப்பாக அங்கீகரிக்கப்படவில்லை. | | |
| (ஆ) | தொடர்புடைய கட்சியினரின் வெளிப்படுத்தல்கள் மீதான இலங்கைக் கணக்கீட்டு நியமம் (டுமுயுளு 24) இன் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்களில் தொடர்புடைய கட்சிகள் குறித்து விரிவான வெளிப்பாடுகள் செய்யப்பட்டிருக்கவில்லை. | முகாமைத்துவத்தின் கருத்துரை வழங்கப்படவில்லை. | கணக்கீட்டு நியமத்தின் விதி முறைகளுக்கு இணங்க வேண்டும். |

## 1.6 வரிப் பிரமாணங்களுடன் இணங்காமை

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2009 இன் 09 ஆம் இலக்கத் தேசிய கட்டிட வரிச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் பிரகாரம் (முறையாகத் திருத்தப்பட்டது) ஒவ்வொரு காலாண்டிற்கும் பின்னர் மாதத்தின் கடைசி நாளில் அல்லது அதற்கு முன்னர் வேட் வரி வருமானத் திரட்டு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். இருப்பினும் வேட் வரி வருமானத் திரட்டானது 02 தொடக்கம் 09 மாதங்களான கால தாமதத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | முகாமைத்துவத்தின் கருத்துரை வழங்கப்படவில்லை. | 2009 இன் 09 ஆம் இலக்க தேசிய கட்டிடங்கள் வரிச் சட்டத்துடன் (முறையாகத் திருத்தப்பட்டது) இணங்குதல் வேண்டும். |

## 1.7 காசு முகாமைத்துவம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| காசு மற்றும் காசுக்குச் சமமானவைகளின் உள்ளடக்கம் தனித்தனியாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்படவில்லை. | முகாமைத்துவத்தின் கருத்துரை வழங்கப்படவில்லை. | குறிப்புக்களில் வெளிக்காட்டப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவு

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கம்பனியின் தொழிற்பாடுகள் ரூபா 13,861,453 வரிக்கு முன்னரான தேறிய இலாபமொன்றை விளைவித்திருந்தமையினால், முன்னைய ஆண்டிற்கான ரூபா 5இ863,611 வரிக்கு முன்னரான தேறிய நட்டத்துடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகளில் ரூபா 19,725,064 ஆன முன்னேற்றத்தினைச் சுட்டிக்காட்டுகின்றது.

### 2.2 பிரதான வருமான மற்றும் செலவின வகைகளின் போக்கு பகுப்பாய்வு

முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்யப்பட்டு மீளாய்வாண்டின் பிரதான வருமான மற்றும் செலவின வகைகள் சதவீத அதிகரிப்பு அல்லது குறைவு பின்வருமாறு.

| வருமானம் செலவினம் | 2019 | 2018 | அதிகரிப்பு குறைவு | சதவீதம் மூ |
|---|---|---|---|---|
| வருமானம் | 106,274,755 | 95,130,264 | 11,144,491 | 12 |
| விற்பனைக் கிரயம் | 35,546,827 | 34,923,155 | 623,672 | 2 |
| நிர்வாகச் செலவினம் | 5,718,105 | 8,058,258 | (2,340,153) | -29 |
| நிதிச் செலவினம் | 51,208,026 | 54,192,472 | (2,984,446) | -6 |

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மின் உற்பத்தி வருமானம் அதிகரித்திருந்தமை காரணமாக மீளாய்வாண்டிற்கான வருமானம் ரூபா 11,144,491 இனால் அதிகரித்திருந்தது. மேலும் இயற்கையான தொற்றுநோயிலிருந்து மீண்டெழுதல் செலவினம் மற்றும் முதலீட்டுச் சபையின் அனுமதிச் செலவினம் என்பன குறைவடைந்திருந்தமையால் நிர்வாகச் செலவினம் ரூபா 2,340,153 இனால் குறைவடைந்திருந்தது.கடன்கள் மீதான வடடிச் செலவினம் குறைவடைந்தமையால் நிதிச் செலவினம் ரூபா 2,984,446 இனால் குறைவடைந்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ வினைத்திறனின்மைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2015 மார்ச் 06 ஆந் திகதிய 4845∴06∴03∴2015 ஆம் இலக்க முதலீட்டுச் சபையின் உடன்படிக்கையின் 2(ை) ஆம் பிரிவின் பிரகாரம் வரி விடுமுறைக் காலம் முடிவுறுத் வரைக்கும் கம்பனி 5000 அமெரிக்க டொலர்களுக்குச் சமமான ஒரு வருடாந்தக் கட்டணத்தை ரூபாய்களில் முதலீட்டுச் சபைக்குச் செலுத்த வேண்டியதுடன் கம்பனி வருடாந்தக் கட்டணத்தை உரிய திகதியில் செலுத்தத் தவறினால் அந்த ஆண்டிற்கான நடைமுறையிலுள்ள 364 திறைசேரிப் பத்திர வீதத்திற்குச் சமமான வட்டியானது தாமதக் கட்டணமாக வசூலிக்கப்படும். இருப்பினும் 2020 நவம்பர் 30 வரையில் 2018 மற்றும் | முகாமைத்துவத்தின் கருத்துரை வழங்கப்பட்டிருக்கவில்லை. | ஒப்பந்தத்துடன் இணங்குதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 2019 ஆம் ஆண்டுகளுக்கான வருடாந்தக் கட்டணங்கள் மற்றும் அதற்கான தண்டப் பணம் என்பன செலுத்தப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | மீளாய்வாண்டில் சொத்துக்கள் மீதான பௌதீக பரிசோதனை கம்பனியால் மேற்கொள்ளப்படவில்லை. | முகாமைத்துவத்தின் கருத்துரை வழங்கப்பட்டிருக்கவில்லை. | சொத்துக்களுக்கான பௌதீகப் பரிசோதனை மேற்கொள்ளப்பட வேண்டும். |

**3.2 மனிதவளங்கள் முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| முறையான அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டத்தினைக் கொண்டிராது (எஸ்ஓஆர்) ஊழியர்களின் ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | முகாமைத்துவத்தின் கருத்துரை வழங்கப்பட்டிருக்கவில்லை. | ஆட்சேர்ப்புத் திட்டம் (எஸ்ஓஆர்) தயாரிக்கப்படல் வேண்டும். |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்**

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2003 யூன் 02 இன் பிஈடீ.⁚12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை மற்றும் 2007 ஒக்தோபர் 02 ஆந் திகதிய பிஈடீ.⁚45 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம், நிதியாண்டு முடிவடைந்த பின்னர் 60 நாட்களுக்குள் வரைபு செயலாற்றல் அறிக்கைகளுடன் அங்கீகரிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். எவ்வாறாயினும், 2019 ஆம் ஆண்டிற்கான கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் 2020 யூலை 13 இல் கணக்காய்வாளர் தலைமை அதிகதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | தொகுதியின் நிதிக் கூற்றுக்கள் இதைவிடவும் முன்னர் அனுப்பப்பட்டிருந்தது. ஆனால், தொகுதி பணிப்பாளர்களில் மாற்றங்கள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட கையொப்பங்களுடன் தொடர்புடைய விடயங்கள் காரணமாக இந்த செயன்முறைகள் தாமதமடைந்து காணப்பட்டது. | சுற்றறிக்கைகளிலுள்ள ஏற்பாடுகள் பின்பற்றப்படல் வேண்டும். |
| (ஆ) | 2016 ஆம் ஆண்டிலிருந்து வருடாந்த அறிக்கைகள் தயாரிக்கப்படவில்லை மற்றும் பாராளுமன்றத்தில் பட்டியல்படுத்தப்படவில்லை | முகாமைத்துவத்தின் கருத்துரை வழங்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கைகளிலுள்ள ஏற்பாடுகள் பின்பற்றப்படல் வேண்டும். |

**4.2 கூட்டிணைந்த திட்டம்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2003 யூன் 02 ஆந் திகதிய பிஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம், கம்பனியினால் கூட்டிணைந்த திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | முகாமைத்துவத்தின் கருத்துரை வழங்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கைகளிலுள்ள ஏற்பாடுகள் பின்பற்றப்படல் வேண்டும். |

**4.3 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2003 யூன் 02 ஆந் திகதிய பிஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம், கம்பனி செயல் நடவடிக்கைத் திட்டத்தினை தயாரித்திருக்கவில்லை. | முகாமைத்துவத்தின் கருத்துரை வழங்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கைகளிலுள்ள ஏற்பாடுகள் பின்பற்றப்படல் வேண்டும். |

**4.4 உள்ளகக் கணக்காய்வு**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| உள்ளகக் கணக்காய்வு பிரிவொன்று ஸ்தாபிக்கப்பட்டிருக்காததுடன் மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சின் உள்ளகக் கணக்காய்வு பிரிவுகள் மற்றும் இலங்கை மின்சார சபையினால் கூட 2019 இல் எவ்வித கணக்காய்வும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | முகாமைத்துவத்தின் கருத்துரை வழங்கப்பட்டிருக்கவில்லை. | உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்படல் வேண்டும். |

**4.5 பாதீட்டுக் கட்டுப்பாடு**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2019 ஆம் ஆண்டிற்காக கம்பனி அங்கீகரிக்கப்பட்ட பாதீடொன்றினைக் கொண்டிருக்கவில்லை. ஆகையினால், உள்ளபடியான செயலாற்றல் மற்றும் வழமைக்கு மாற்றமான வேறுபாடுகளினை மீளாய்வு செய்ய முடியாதிருந்தது. | முகாமைத்துவத்தின் கருத்துரை வழங்கப்பட்டிருக்கவில்லை. | பாதீடானது 2003 யூன் 02 ஆந் திகதிய பிஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் தயாரிக்கப்பட்டு அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ள வேண்டும். |

## 4.6 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் (எஸ்டீஜி) தொடர்பான ஐக்கிய நாடுகளின் ‘‘2030 நிகழ்ச்சி நிரலின்’’ பிரகாரம், அனைத்து அரச நிறுவனங்களும், அதன் பரப்பின் கீழ்க் காணப்படும் இலக்குகள் மற்றும் தொழிற்பாடுகளின் அமுல்படுத்தலில் பங்களிப்புச் செய்தல் வேண்டும். ஆனால், கம்பனி எஸ்டீஜீ பற்றி அறிந்திருக்காததுடன் அடைந்து கொள்ளப்பட வேண்டிய குறிக்கோள்கள், அந்த இலக்குகளினை அடைந்து கொள்வதிலுள்ள இடைவெளிகள் மற்றும் செயலாற்றலினை அளவிடுவதற்கான பொருத்தமான குறிகாட்டிகளைக் கூட இனங்கண்டிருக்கவில்லை. | முகாமைத்துவத்தின் கருத்துரை வழங்கப்பட்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் தொடர்பான ஐக்கிய நாடுகளின் ‘‘2030 நிகழ்ச்சி நிரலின்’’ ஏற்பாடுகளினைக் கம்பனி பின்பற்றுதல் வேண்டும். |